**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV, BNS)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.1073/2025 |
| Deposition of witness for Prosecution | : | P.W–1 |
| Name | : | செல்வமுருகன், வயது 51 |
| Father Name/Husband Name | : | மாரியப்பன் |
| Village | : | மூப்பன்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | வேலை இல்லை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23th day of February 2026.

**(A1, A2 present).**

**முதல் விசாரணை**

1 நான் தற்போது மூப்பன்பட்டியில் வசித்து வீட்டில் இருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எனது பக்கத்து வீட்டுக்காரர்கள். 12.04.2025 ஆம் தேதி அன்று காலை 06.45 மணியளவில் மூப்பன்பட்டியில் உள்ள எதிரிகளின் வீட்டிற்கு கீழ்புறம் எனது வீட்டிற்கு முன்பு ஓத்தா கூதி, ஓம்மா கூதி என்று 1 வது எதிரி அசிங்கமாகத் திட்டி எனது வயிற்றில் ஓங்கி எத்தி விட்டார்.

2. 2 வது எதிரி என்னைப் பார்த்து ஏதாவது செய்தால் உன்னால் ஒன்றும் செய்ய முடியாது , எங்கே வேண்டுமானாலும் போய்க்கோ என்றார். நான் கீழே விழும் போது எனது மனைவி மாரியம்மாள் என்னை பிடித்தார். அதன் பிறகு கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். ( **அந்த புகார் வாக்குமூலம் அ.சா. ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

3. நான் முதல் விசாரணையில் சொன்னதைதான் போலிசார் விசாரணையில் சொன்னேன். எனக்கும், எதிரிகளுக்கும் இடம் சம்பந்தமாக பிரச்சனை உள்ளது என்றால் சரியல்ல, போலிசார் விசாரணையில் எனக்கும், எதிரிகளுக்கும் இடம் சம்பந்தமாக பிரச்சனை இருந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு மது குடிக்கும் பழக்கம் உண்டு என்றால் சரியல்ல, எனக்கு அல்சர் வந்ததால் வயிற்றில் அறுவை சிகிச்சை செய்தார்கள்.

4. கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் புறக் காவல் நிலையம் உள்ளது, புறக்காவல் நிலையத்தில் நான் புகார் கொடுக்கவில்லை. மூப்பன்பட்டி கீழத்தெரு என்பது கிழமேல் தெரு, அந்த தெருவிற்கு வடக்கேயும், தெற்கேயும் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு மேற்கே மாரீஸ்வரன் வீடு உள்ளது. எனது வீட்டிற்கு கிழக்கே தெய்வநாயகி, புவனேந்திரன் வீடு உள்ளது. சம்பவம் நடந்த உடன் மருத்துவமனைக்கு எனது மருமகன் பாலமோகன் என்னை அழைத்துச் சென்றார். நான் மேற்படி விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லவில்லை. நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில் எதிரிகள் இந்த குற்ற சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல.

5. எனக்கும் , எதிரிக்கும் இட சம்பந்தமாக பிரச்சனை உண்டு என்றால் சரியல்ல. எதிரிகள் என்னை அசிங்கமாகத் திட்டி எந்த பிரச்சனையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1வது எதிரி காலால் என்னை எட்டி மிதிக்கவில்லை என்றால் சரியல்ல, நான் அதிகமாக மது குடித்து, குடலில் புண் ஏற்பட்டு, வயிற்றில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது என்றால் சரியல்ல, அந்த சிகிச்சைக்கு மருத்துவமனையில் சேர்ந்து விட்டு எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.